அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
New No.46,Old,No.4,Ramakrishna Street,
(North Usman Road)T.Nagar,Chennai-6000117.
044-28143306 / 28143307 / Fax 42124624
www.aismk.in



அ.எண்.221/2015
தேதி.12.9.2015

# சமத்துவ மக்கள் கட்சி மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது

*அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் சென்னை தலைமை அலுவலகத்தில் உள்ள மகாகவி பாரதியார் அரங்கில் நடைபெற்றது.*

**மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நடைபெற்றது**

1. சென்னையில் கடந்த 9, 10 ஆகிய இருநாட்களில் உலக முதலீட்டாளர்கள் கூட்டத்தை அறிவித்து, சிறப்புற நடத்தி சுமார் 2,42,000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்த்து தமிழகத்திற்கும், இந்திய தேசத்திற்கும் பெருமையும், சிறப்பும் ஏற்படுத்தியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்தக் கூட்டம் பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது. "**தமிழ்நாடு 2023 தொலைநோக்குத் திட்டம்**" என்னும் வெற்றிகரமான இலக்கை அடைவதற்கு அடித்தளமாக இந்த முதலீட்டாளர்கள் மாநாடு வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது என்ற வகையிலும், தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு நேரடி வேலை வாய்ப்புக்களையும்,மற்றும் பல்லாயிரக்கணக்கில் மறைமுக வேலைவாய்ப்புக்களையும் உருவாக்கித்தந்து தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலுவதாக அமைந்திருக்கிறது என்ற வகையிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்க்கதரிசனத்தை இந்தக் கூட்டம் வெகுவாகப் பாராட்டி மகிழ்கிறது.

2. 2016 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை மனதில் கொண்டு களப்பணிகளைத் தீவிரப்படுத்த"100 நாள் செயல் திட்டத்தை" தலைவர் புரட்சித் திலகம் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் படி விரைந்து செயல்படுத்துவது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

3. தலைவர் புரட்சித் திலகம் அவர்களின் ஆலோசனைப்படி கொள்கை விளக்கப்பொதுக்கூட்டங்கள் தமிழகமெங்கும் 500 இடங்களில் நடத்துவதென்று தீர்மானிக்கப்படுகிறது. கூட்டங்கள் நடைபெறும் தேதிகள், இடங்கள்,

பேச்சாளர்கள் உள்ளிட்ட விபரங்கள் தலைமையிலிருந்து அறிவிப்பதை அனைத்து நிர்வாகிகளுக்கும் சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது..

4. தொகுதிச் செயலாளர்களின் பணிகளை மேம்படுத்தும் விதமாக தலைமையிலிருந்து தொகுதி மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு, தேர்தல் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படும். எந்தெந்த தொகுதிக்கு யார்யார் மேற்பார்வையாளர்கள் என்ற விபரம் விரைவில் அறிவிக்கப்படும்.

5. கர்நாடக மாநிலத்தில் காவிரியின் குறுக்கே உள்ள அணைகளில் போதுமான அளவு நீர் இருப்பு இருந்தும், தமிழகத்திற்கு தண்ணீர் தர மறுக்கும் கர்நாடக அரசின் போக்கை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது. தமிழகத்தின் கோரிக்கையை ஏற்று, பாரதப்பிரதமர் மோடி அவர்கள் தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்துவிட கர்நாடக அரசை வலியுறுத்த வேண்டும் என்றும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது. இதே போன்று காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் அணை கட்டியே தீருவோம் என்ற பிடிவாதப் போக்கையும் கர்நாடக அரசு கைவிட வேண்டும் என்று இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

6. முல்லைப்பெரியாறின் குறுக்கே கேரள அரசு மற்றும் ஒரு புதிய அணைகட்டுவதற்கு தேசிய வனவள ஆணையம் அனுமதி மறுத்திருப்பது வரவேற்கத்தக்கது. இனியும் புதிய அணை கட்டியே தீருவோம் என்ற பிடிவாதத்தை கேரள அரசு கைவிட வேண்டும் என்று இக்கூட்டம் கேரள அரசை வலியுறுத்துகிறது.

7. உலகச்சந்தையில் கச்சா எண்ணெய் விலைகள் வீழ்ச்சி அடைந்த அளவிற்கு, பெட்ரோல், டீசல் விலையைக் குறைக்காமல் எண்ணெய் நிறுவனங்கள் மிககுறைந்த அளவில் பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலைகளை குறைத்து வருவதை இக்கூட்டம் கண்டிக்கிறது. உலகச்சந்தையில் கச்சா எண்ணெயின் தற்போதைய விலை முன்பிருந்தபோது பெட்ரோல் டீசல் எந்த விலைக்கு விற்கப்பட்டதோ அந்த அளவிற்கு அவற்றின் விலைகளை குறைத்திட வேண்டும் என்று மத்திய அரசை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

8. இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டும் தமிழக மீனவர்கள் தாக்கப்படுதல் நின்றபாடில்லை. மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு தமிழக மீனவர்களுக்கு நிரந்தர பாதுகாப்பு அளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நம் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப்பு பகுதியில் தடையில்லாமல் மீன்பிடி தொழில் செய்ய மத்திய அரசு ஆவண செய்ய வேண்டும். சமத்துவ மக்கள் கட்சி ஏற்கனவே வலியுறுத்தியபடி இரு நாட்டு

மீனவர்களையும் மீண்டும் அழைத்துப் பேசி நிரந்தர தீர்வுகாண வேண்டும் என்றும் இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

9. எல்லைப் பகுதிகளில் பாகிஸ்தான் ராணுவத்தின் அத்துமீறல்கள் தொடர்ந்து நடந்த வண்ணம் உள்ளன. சமீபத்தில் பாகிஸ்தான் ராணுவத் தளபதி நமது தேசத்தை அச்சுறுத்தும் விதமாக பேசியிருப்பதும் கண்டனத்திற்கு உரியது. மத்திய அரசு எல்லைப் பகுதிகளில் தகுந்த பதிலடி கொடுப்பதோடு பேச்சு வார்த்தை மூலம் இது போன்ற பதற்றங்களைத் தவிர்க்க வேண்டும் என்று இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

10. 2016 சட்டமன்றப் பொதுத் தேர்தலில் கூட்டணி அமைத்தல் உள்ளிட்ட அனைத்து தேர்தல் தொடர்பான முடிவுகளை எடுக்க தலைவர் புரட்சித் திலகம் அவர்களுக்கு முழு அதிகாரம் வழங்குவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

11. தமிழகத்தில் படிப்படியாக மதுவிலக்கை அமல்படுத்துவதற்கு அரசு ஆவண செய்ய வேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

12. தொழில் வளர்ச்சியில் பின் தங்கியுள்ள தென் மாவட்டங்களில் தொழில்வளத்தை பெருக்க முதலீட்டாளர்கள் மாநாட்டில் ஏறத்தாழ 1 லட்சம் கோடி வரை புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளதற்கு பாராட்டையும், நன்றியையும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இச்சமயம் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

13. தஞ்சை டெல்டா பகுதியில் மீத்தேன் எரிவாயு எடுக்கும் திட்ட ஒப்பந்தம் காலாவதியான நிலையில், அந்த நிறுவனங்கள் மீண்டும் அனுமதிபெற முயற்சிப்பதாக தெரிகிறது. தமிழக விவசாயிகளின் சந்தேகங்களை போக்கும் விதமாக மீத்தேன் திட்டம் கைவிடப்படுவதை மத்திய அரசு வெளிப்படையாக அறிவிக்கப்பட வேண்டும் என்று இக்கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

*கட்சியின் நிறுவனர் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், துணைத்தலைவர் ஏ.நாராயணன் எம்.எல்.ஏ, பொதுச்செயலாளர் கரு.நாகராஜன், பொருளாளர் ஏ.என்.சுந்தரேசன், கொள்கைபரப்பு செயலாளர் ஆர்.ஜெயப்ரகாஷ், துணைப்பொதுச் செயலாளர் என்.என்.சண்முகசுந்தரம், தலைமைநிலையச் செயலாள்ர் ஐஸ் ஹவுஸ் தியாகு, மற்றும்*

*கலை இலக்கிய அணி செயலாளர் என்.,எம்.எஸ்.விவேகானந்தன், அரசியல் ஆலோசகர் திருச்சி ப.பன்னீர் செல்வம்,நிதி ஆலோசகர் டாக்டர் ராஜசேகர், இளைஞரணி செயலாளர் சி.வி.சாம் மேத்யூ, வர்த்தகரணிச் செயலாளர் கே.ஜே.நாதன், தென்மண்டலச் செயலாளர் என்.சுந்தர், மதுரை மண்டலச் செயலாளர் ஜி.ஈஸ்வரன், சென்னை மண்டலச் செயலாளர் எம்.ஏ.சேவியர், இளைஞரணி துணைச் செயலாளர்கள், டி.மகாலிங்கம், பி.ஆர்.ஆர்.சுந்தர், பிரான்சிஸ் அந்தோனிராஜ், மகளிரணி துணைச் செயலாளர்கள் மா.ரா.ஜெமிலா, எம்.பாகீரதி, வர்த்தகரணி துணைச் செயலாளர் ஜே.பாபு, புதுவை மாநிலச் செயலாளர் ஈ.கே.ராமச்சந்திரன் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் கலந்து கொண்டார்கள்.*

*2016 தேர்தல் பணிகள் குறித்தும், 500 இடங்களில் கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம் நடத்துவது, கட்சி வளர்ச்சிப் பணிகளுக்கு 100 நாள் சிறப்புத் திட்டம் பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது.*

*நன்றி, வணக்கம்,*
*உழைப்பவரே உயர்ந்தவர்,*
*என்றும் அன்புடன்,*

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்